<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>

<u>அசல் வழக்கு எண். 64/2015</u>

DW1 – திருமதி.முத்துலெட்சுமி நாள். 04.09.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி.B.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் காரைக்குடியில் எவ்வளவு வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் 32 வருடங்களாக வசித்து வருகிறேன். எனது சகோதரி 3ம் பிரதிவாதி சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை தாலுகா, அனுக்கனேந்தல் கிராமத்தில் 25 வருடங்களாக இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 மற்றும் பி.வா.சா.ஆ 2 ஆவணங்களின் அசல் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் உள்ளது. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் பெரியய்யா வகையறாவை 1ம் பார்ட்டியாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெரியய்யாவுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 60 வருடங்களுக்கு முன்னர். எனது தாய் தந்தைக்கு திருமணம் நடைபெறும்போது 1ம் வாதியின் தாயார் அப்போது ஊரில் இல்லை என்றால் சரிதான்.

2. 1ம் வாதியின் தாயார் ஏன் அப்போது ஊரில் இல்லை என்றால் கருத்து வேறுபாடு காரணமாக அப்போது அவர் ஊரில் இல்லை. வில்லாரேந்தலில் 1ம் வாதியும், வாதியின் தாயாரும் எத்தனை வருடங்களாக இருந்தார் என்றால் தெரியாது. 1ம் வாதியும், வாதியின் தாயாரும் ஊரில் இல்லாததால் தான் எனது

தகப்பனார் எனது தாயாரை திருமணம் செய்தார் என்றால் அதைப்பற்றி தெரியாது. 2ம் வாதி எங்கு இருந்தார் என்றால் கீழ்மருதங்குளம் கிராமத்தில் இருந்தார் எவ்வளவு காலம் என்று தெரியாது. 1ம் வாதியும், வாதியின் தாயாரும் எனது தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு ஊரில் இல்லை என்றும், 2ம் வாதி திருமணத்திற்கு பின்பு கீழ்மருதங்குளம் கிராமத்தில் இருந்து வந்தார் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3. பி.வா.சா.ஆ 2 ஆவணம் எழுதும் போது எனக்கும், 3ம் பிரதிவாதிக்கு என்ன வயது இருக்கும் என்றால் எனக்கு 12 வயது, 3ம் பிரதிவாதிக்கு 6 வயது. பி.வா.சா.ஆ 2 ஆவணத்தை யார் எங்கு வைத்து எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ஆவணம் எழுதிய காலகட்டத்தில் எனது தகப்பனார் நெஞ்சுவலியால் பாதிக்கப்பட்டு இருந்தார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 உயில் ஆவணம் எனது தகப்பனார் எழுதவில்லை என்றும், சொத்துக்களை மோசடி செய்வதற்காக போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் நான் பெருமாத்தை என்பவரை திருமணம் செய்து புஷ்பம் அம்மாள் என்ற பெண்ணும் 1ம் வாதி காளிமுத்து என்பவர்களும் வாரிசுகளாக இருந்து வருகிறார்கள் என்றும், பின்பு குஞ்சரம் என்பவரை திருமணம் செய்து 2ம் வாதியாக பாலசுப்பிரமணியன் பிறந்துள்ளார் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் நான் பெரியய்யாவிற்கும் அவரது இரண்டு மனைவிகளுக்கும் சவரச்சனைகள் செய்து வருவதாகவும், அதை தொடர்ந்து செய்ய வேண்டும் என அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ஆவணத்திற்கு பிறகு எனது தகப்பனார் வேறு ஏதேனும் ஆவணங்கள் எழுதி பதிவு செய்தாரா என்றால் எழுதவில்லை. அவ்வாறு பி.வா.சா.ஆ 2 ஆவணத்திற்கு பின்பு ஏதேனும் ஆவணம் எழுதி பதிவு செய்யப்பட்டிருந்தால் அது மோசடியாக தயார் செய்யப்பட்டதாக இருக்கும்

என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 மற்றும் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சில சொத்துக்களை எனது தகப்பனார் விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை விற்பனை செய்யும் போது 1, 2 வாதிகளிடம் அதில் சாட்சி கையொப்பம் வாங்கப்பட்டது என்றால் அதைப்பற்றி தெரியாது.

5. பி.வா.சா.ஆ,1 மற்றும் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்திற்கும் எனது தகப்பனார் பெயரில் பட்டா எண்.629 என தாக்கலாகி உள்ளது என்றால் சரிதான். 1, 2 வாதிகள் பெரியய்யாவுக்கு பாத்தியப்பட்ட சொத்துககளை பாகம் பிரித்துக் கொள்ளாமல் கண்டேத்தமாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் சில சொத்துக்கள் இருமுறை சொல்லப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி தெரியாது. உயில் எழுதப்பட்டது என்றும், அதன் படி எனக்கு பாத்தியம் உள்ளது என்றும், மேற்படி உயில் எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2005ம் ஆண்டு பெரியய்யா எழுதி வைத்ததாக இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் மோசடியாக எழுதப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

7. உயில் என்று ஒரு ஆவணம் இருந்திருந்தால் 2005ம் ஆண்டு எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் அதைப்பற்றி சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 1990 காலகட்டத்தில் உடல்நிலை சரியில்லாமல் இருநதார் என்று 1, 2 வாதிகள் ஊரில்தான் இருந்தார்கள் என்றும், நான் எனக்கு சொத்துக்கள் கிடைக்காது என்பதால் எனது உறவுக்காரர்களை வைத்து மோடிசயாக ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான், 3ம் பிரதிவாதி மற்றும் எனது சகோதரி 7ம் பிரதிவாதி இந்திரா ஆகியோர்கள் பெரியய்யாவின் சட்டப்படியான வாரிசுகள் இல்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 28.03.2015 ம் தேதி இறந்தார்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருவாடானை